
# சனி கோளின் நிலவில் நீர்: உறுதி செய்த ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியின் புதிய படங்கள்




**நியூயார்க்:** சூரிய குடும்பத்திற்கு உள்ளே பூமியைத் தவிர மற்றொரு கோளின் நிலவு ஒன்றில் நீர் இருப்பதை ஜேப்ஸ் வெப் தொலைநோக்கி உறுதி செய்துள்ளது.

விண்வெளி ஆராய்சி அசுர வளர்ச்சியை அடைந்த காலக்கட்டத்தில் இருந்தே பூமியைத் தவிர்த்து பிற கோள்களில் மனிதன் வாழ்வதற்கு சாத்திய கூறுகள் உள்ளதா என்பதையொட்டிதான் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இந்த நிலையில் பூமியைத் தாண்டி உள்ள சனிக் கோளின் துணை கோளான அதாவது அதன் நிலவு ஒன்றில் நீர் இருப்பதை ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி படம் பிடித்து அனுப்பியுள்ளது.

இதன் அடிப்படையில் நாசா விஞ்ஞானிகள் வெளியிட்ட அறிவிப்பில், "நமது சூரிய குடும்பத்தில் உள்ள சனிக் கோளில் அதன் நிலவுகளில் ஒன்றான என்செலடஸில் ( பனிக்கட்டியிலான நிலவு) 9,600 கிலோ மீட்டர் நீளத்திற்கு நீரூற்று காணப்படுவதை ஜேம்ஸ் வெப் தொலை நோக்கி கண்டறிந்துள்ளது. 2005 ஆம் ஆண்டே சனிக்கோளின் நிலவுகளில் நீர் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறி இருந்த நிலையில் ஜேம்ஸ் வெப் இதனை உறுதி செய்துள்ளது.

இந்த நீரூற்றின் அளவை வைத்து பார்க்கும்போது ஜப்பானிலிருந்து இங்கிலாந்துக்கு செல்லும் தூரத்தை இந்த நீர் ஊற்று கொண்டிருக்கிறது. மேலும் இதில் காணப்படும் கடல் பகுதிகளில் நீர் உப்புத் தன்மையை கொண்டிருப்பதால் உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியக் கூறுகளும் உருவாகலாம்" என்று தெரிவித்துள்ளது.

மேலும் என்செலடஸ் குறித்து விஞ்ஞானிகள் கூறும்போது, " என்செலடஸின் மேற்பரப்பில் வெப்பநிலை மைனஸ் 200 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கும். அதே நேரத்தில் நிலவின் மையப்பகுதியில், இந்த தண்ணீரை சூடாக்கும் அளவுக்கு வெப்பம் இருப்பதாக நாங்கள் நினைக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார். சனிக் கோளுக்கு 124 நிலவுகள் உள்ளன குறிப்பிடத்தக்கது.

**ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி**: நாசாவின் மைல்கல்லாக பார்க்கப்படும் ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி கடந்த ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தன்று விண்ணில் ஏவப்பட்டது. பால்வீதியில், பூமியைப் போன்று உயிர் இருந்த, இருப்பதற்கு சாத்தியமான புறக்கோள்கள் (exoplanets) இருக்கின்றனவா, பெருவெடிப்பிலிருந்து முதல் விண்மீன் கூட்டங்கள் எப்படி உருவாகின போன்ற பல கேள்விகளுக்கு இத்தொலைநோக்கி பதில் சொல்லும் என்று நாசா தெரிவித்தது.

பூமியின் வெப்பத்தின் காரணமாக வரும் அகச்சிவப்புக் கதிர்கள் தொலைநோக்கிக்கு இடையூறாக இருக்கக்கூடாது என்பதற்காக, பூமியிலிருந்து 15 லட்சம் கிலோமீட்டர் தொலைவில் ஜேம்ஸ் வெப் நிலைநிறுத்தப்பட்டது. இந்த நிலையில், ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலை நோக்கி விண்வெளியில் பதிவு செய்த முதல் புகைப்படத்தை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கடந்த ஆண்டு ஜூலை மாதம் வெளியிட்டார். 1960-களில் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தில் நாசா முனைப்புடன் இருந்தபோது, அதன் நிர்வாகியாக இருந்த ஜேம்ஸ் வெப்பின் பெயர்தான் இத்தொலைநோக்கிக்கு சூட்டப்பட்டுள்ளது. இந்திய

மதிப்பில் சுமார் ரூ. 75,000 கோடி செலவில் இந்த தொலை நோக்கி உருவாக்கப்பட்டுள்ளது

## நடப்பு நிதி ஆண்டில் இந்தியா 6.7 சதவீத வளர்ச்சியை எட்ட வாய்ப்பு: சிஐஐ தலைவர் கருத்து




**புதுடெல்லி:** இந்தியாவின் பொருளாதாரம் நடப்பு நிதி ஆண்டில் 6.5 சதவீதம் முதல் 6.7 சதவீத வளர்ச்சியை எட்டும் என்று இந்திய தொழில் கூட்டமைப்பு (சிஐஐ) தலைவர் தினேஷ் தெரிவித்துள்ளார்.

2022-23-ம் நிதி ஆண்டின் 4-ம் காலாண்டின் ஜிடிபி வளர்ச்சி விவரங்களை மத்திய அரசு நேற்று முன்தினம் வெளியிட்டது. அதன்படி, 4-ம் காலாண்டில் இந்தியாவின் ஜிடிபி 6.1 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது. 2022-23 முழு நிதி ஆண்டுக்கான ஜிடிபி 7.2 சதவீதமாக உள்ளது.

ரிசர்வ் வங்கி, 2022-23 நிதி ஆண்டின் 4-ம் காலாண்டில் நாட்டின் ஜிடிபி 5.1 சதவீதமாகவும் ஒட்டுமொத்த நிதி ஆண்டு ஜிடிபி 7 சதவீதமாகவும் இருக்கும் என்று மதிப்பிட்டிருந்தது. ஆனால், ரிசர்வ் வங்கி மதிப்பீடு செய்ததைவிடவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் உயர்ந்துள்ளது.

இந்நிலையில், நடப்பு நிதி ஆண்டு வளர்ச்சி குறித்து சிஐஐ தலைவர் தினேஷ் கூறுகையில், “ஜி20 அமைப்புக்கு இந்தியா தலைமை பொறுப்பு ஏற்றிருக்கும் சூழலில், உலக நாடுகளின் கவனம் இந்தியா மேல் குவிந்துள்ளது. அந்த வகையில் நடப்பு ஆண்டு இந்தியாவுக்கு முக்கியமான ஆண்டாகும். உள்நாட்டின் தொழில்

செயல்பாடுகளின் வளர்ச்சி, மத்திய அரசு மூலதன செலவினம் ஆகியவற்றின் காரணமாக 2023-24 நிதி ஆண்டில் இந்தியாவின் வளர்ச்சி 6.7 சதவீதமாக இருக்கும் என்று தெரிகிறது. அதேபோல், பணவீக்கமும் கட்டுக்குள் வரும்" என்று தெரிவித்துள்ளார்.

## சர்வதேச தடகளப் போட்டியில் தங்கம் வென்ற விவசாயி மகன்




**மதுரை:** கிரீஸ் நாட்டில் நடந்த சர்வதேசப் போட்டியில் மும்முறை நீளம் தாண்டுதலில் தங்கம் வென்று இந்தியாவுக்குப் பெருமை சேர்த்துள்ளார் மதுரை விவசாயியின் மகன் செல்வபிரபு திருமாறன்.

மதுரை ஊமச்சிகுளம் அருகே கொடிமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி திருமாறன். இவரது மனைவி சுதா. மகன்கள் ராஜபிரவீன் (20), செல்வ பிரபு (18). கால்பந்து வீரரான ராஜபிரவீன் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் படித்து வருகிறார். இளைய மகன் செல்வ பிரபு, திருச்சி பிஷப் கல்லூரியில் இளங்கலை ஆங்கில இலக்கியம் படித்து வருகிறார்.

மும்முறை நீளம் தாண்டுதல் விளையாட்டு வீரரான இவர் கடந்த மே 27-ம் தேதி கிரீஸ் நாட்டில் நடந்த கிராண்ட் பிக்ஸ் சர்வதேச தடகளப் போட்டியில் மும்முறை நீளம் தாண்டுதலில் 16.78 மீ நீளம் தாண்டி தங்கப் பதக்கம் வென்றார். இதன் மூலம் 12 ஆண்டுகளுக்கு முன்பு பஞ்சாப் வீரர் ஹர்பிந்தர் சிங் நிகழ்த்திய ஜூனியர் அளவிலான தேசிய சாதனையை (16.63 மீ) முறியடித்துள்ளார். இந்தப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றதன் மூலம் வரும் ஜூலை 12-ம் தேதி

நடைபெற உள்ள ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டிக்கு செல்வ பிரபு தகுதி பெற்றுள்ளார்.

இதுகுறித்து செல்வ பிரபுவின் தந்தை திருமாறன் கூறுகையில், சிறு வயதிலிருந்தே செல்வ பிரபுவுக்கு விளையாட்டில் ஆர்வம் அதிகம். ராமகிருஷ்ணா மடத்தின் பள்ளியில் 5-ம் வகுப்பு படித்தபோது அவரது விளையாட்டு ஆர்வத்தை பார்த்து திருச்சியில் உள்ள விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விடுதி பள்ளியில் சேர்ந்து பயிற்சி பெற தேர்ந்தெடுக்கப் பட்டார்.

மாநில, தேசிய அளவில் பல விருதுகள் பெற்றுள்ளார். தற்போது கிரீஸ் நாட்டில் நடந்த சர்வதேசப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றதோடு ஜூனியர் பிரிவில் 16.78 மீட்டர் நீளம் தாண்டி சாதனை படைத்துள்ளார். தற்போது பெங்களூரு பெல்லாரியிலுள்ள விளையாட்டுப் பயிற்சி மையத்தில் தங்கி பயிற்சி பெற்று வருகிறார் என்று கூறினார்.

செல்வபிரபு கூறுகையில், மும்முறை நீளம் தாண்டுதல் விளையாட்டுப் போட்டியில் ஒலிம்பிக்கில் இந்தியாவுக்காக தங்கம் வெல்வதே எனது லட்சியம். அதற்காக தீவிர பயிற்சி எடுத்து வருகிறேன். மத்திய, மாநில அரசுகள் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்றார்.

## சென்னையில் கருணாநிதி பெயரில் பன்னாட்டு அரங்கம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



**சென்னை:** சென்னையில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பெயரில் 25 ஏக்கரில் பன்னாட்டு அரங்கம் (‘கலைஞர் Convention Centre’) அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

சென்னை, கலைவாணர் அரங்கத்தில், கருணாநிதி நூற்றாண்டு விழாவினையொட்டி செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கருணாநிதி நூற்றாண்டு இலச்சினையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில்," பாலர் இல்லமாக இருந்த இந்த இடத்தை தலைவர் கருணாநிதியால் கலைவாணர் அரங்கமாக ஆக்கப்பட்டு, அந்த கலைவாணர் அரங்கத்தில் நடைபெறும் தலைவர் கருணாநிதியின் நூற்றாண்டு இலச்சினை, அதாவது லோகோ வெளியீட்டு விழாவிற்குச் சிறப்பு சேர்க்கக்கூடிய வகையில் நம்முடைய பெருமதிப்புற்கும் மரியாதைக்கும் உரிய கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் வருகை தந்திருக்கிறார்கள். தந்தை பெரியாரின் கொள்கை வாரிசான தலைவர் கருணாநிதியை வாழ்த்துவதற்காக மகாத்மா காந்தியின் பேரன் இங்கே வருகை தந்திருக்கிறார்.

திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக நாங்கள் இருந்தாலும், அண்ணல் காந்தியடிகளுக்கும் எங்கள் இயக்கத்துக்குமான தொடர்பை மரியாதைக்குரிய கோபாலகிருஷ்ணன் காந்தி நன்கு அறிவார். தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்குவதற்கு முன்பு காங்கிரஸ் இயக்கத்தில் அண்ணல் காந்தியடிகளின் தொண்டராகத்தான் இருந்தார். கதராடை உடுத்தினார். கதர்த் துணிகளோடு நாடு முழுவதும் சுற்றினார். கள்ளுக்கடை மறியல் நடத்தினார். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் இருந்தார். வகுப்புரிமையைக் காக்க தனி இயக்கம் தேவை என்பதால் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார் தந்தை பெரியார்.

மதவெறியன் கோட்ஸே-வால் மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டபோது, தந்தை பெரியார் அடைந்த வேதனை என்பது வார்த்தைகளால் விவரிக்க முடியாதது. “இருந்த காந்தி, காந்தி! இறந்த காந்தி, எங்கள் காந்தி!” என்றார். அதே போல் பேரறிஞர் அண்ணாவும், அண்ணல் காந்தியடிகள் மீது மிகுந்த மதிப்பு வைத்திருந்தார்கள். ‘உலகப் பெரியார் காந்தி’ என்ற தலைப்பில் 1948-ஆம் ஆண்டு ஒரு புத்தகம் எழுதினார் பேரறிஞர் அண்ணா. அண்ணல் காந்தி கொல்லப்பட்ட போது, "காந்தியாரின் புகழொளியை அல்ல, அவரது உழைத்து அலுத்த உடலைத்தான் வெறியன் சுட்டு வீழ்த்தினான்" - என்று தனது 'திராவிட நாடு' இதழில் எழுதினார்.

அந்த வரிசையில்தான் கருணாநிதியும், அண்ணல் காந்தியடிகள் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். நாங்கள் எப்படி அண்ணல் காந்தியடிகள் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறோமோ, அதைப் போல தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா – தலைவர் கருணாநிதி – திராவிட இயக்கம் மீது மதிப்பு கொண்டவர் தான் நம்முடைய கோபாலகிருஷ்ணன் அவர்கள்.

'திராவிடக் கப்பல் சென்றடைய வேண்டியது கூட்டாட்சித் துறைமுகம்' என்றும் சொன்னார். ‘தந்தை பெரியாரின் இலட்சிய அரசியலை, பேரறிஞர் அண்ணா, கருணாநிதி ஆகியோரின் செல்வாக்கு, ஆட்சிப்பீடத்தில் அமர்த்தியது’ என்றும் எழுதியவர் கோபாலகிருஷ்ணன் காந்தி. மேலும், ‘பேரறிஞர் அண்ணா, கருணாநிதி ஆகியோரின் அரசியல் என்பது ஏழைகளுக்கு ஆதரவான, உழவர்களுக்கு ஆதரவான, சாமானிய மக்களுக்கு ஆதரவான, சாதியத்துக்கு எதிரான, மதவாதத்துக்கு எதிரான கொள்கைகளின் வழியே ஆட்சியதிகாரத்தை அணுகுவது’ என்றும் எழுதியிருக்கிறார்.

நாளை ஜூன் 3-ஆம் நாள்! வீழ்ந்து கிடந்த தமிழ்ச் சமுதாயத்துக்கு விடிவெள்ளியாய்த் தோன்றி - வாழும் காலத்தில் ஒளிதரும் உதயசூரியனாக வாழ்ந்து - நிறைந்த பின்பும் கலங்கரை விளக்கமாக வழிகாட்டிக் கொண்டிருக்கிற கருணாநிதி தோன்றிய நாள். அவரது பிறந்த நாள்

என்பதைவிட, தமிழ்ச் சமுதாயத்திற்கு உயிராக - உணர்வாக இருந்தவர் - உதயமான நாள் என்றே சொல்ல வேண்டும்.

கருணாநிதி நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு அரசு ஓராண்டு காலம் கொண்டாடத் திட்டமிட்டுள்ளது. ஏனென்றால், அவர்களே தமிழ்நாடு அரசு ஆவார். என் தலைமையிலான இந்த திராவிட மாடல் அரசையே அவருக்கும் அவரது புகழுக்கும் நான் காணிக்கை ஆக்குகிறேன். இந்த நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி என்றால் தலைவர் கருணாநிதி தான். அவர் தொடாத துறையும் இல்லை - தொட்டுத் துலங்காத துறையும் இல்லை என்ற வகையில் அனைத்துத் துறையிலும் முத்திரை பதித்தவர்.

கருணாநிதி பெயரால் மாபெரும் நூலகம் மதுரையில் அமைய இருக்கிறது. சென்னையில் அவரது நூற்றாண்டு நினைவு மருத்துவமனை அமைய இருக்கிறது. அரசின் சார்பில் மாதம்தோறும் – மாவட்டம்தோறும் விழாக்களை நடத்த இருக்கிறோம். இவை புகழ்பாடும் விழாக்களாக மட்டுமல்ல – கருணாநிதி இந்த தமிழ்ச் சமுதாயத்திற்குச் செய்த சாதனைகளை விளக்கும் விழாக்களாக இது அமைய இருக்கின்றன. பயன்பெற்றோர் பங்கேற்கும் விழாக்களாக அது அமைய இருக்கின்றன.

கடந்த சில நாட்களுக்கு முன்னால் சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தமிழ்நாட்டை நோக்கி ஏராளமான தொழில் முதலீடுகளை ஈர்த்து வந்துள்ளேன். 3233 கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தங்களும் கையெழுத்தாகி இருக்கிறது.

வருகிற ஜனவரி மாதம் சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்த இருக்கிறோம். அந்த மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும் என்று சிங்கப்பூர், ஜப்பான் முதலீட்டாளர்களுக்கு நான் அழைப்பு விடுத்திருக்கிறேன். தமிழ்நாட்டின் மீதும் திராவிட முன்னேற்றக் கழக அரசு மீதும் அவர்கள் வைத்திருக்கக்கூடிய மதிப்பையும் மரியாதையையும் அப்போது நான் அறிந்து கொண்டேன்.

இந்தியாவில் எந்த மாநிலமும் முன்னெடுக்காத போது, 1997-ஆம் ஆண்டே டைடல் பார்க்கை உருவாக்கி தகவல் தொழில்நுட்பத் துறையில் புரட்சியை ஏற்படுத்தியவர் நம்முடைய தலைவர் கருணாநிதி. அந்தத் துறையில் தமிழ்நாடு மாபெரும் சாதனையை நிகழ்த்துவதற்கும் – உலக நிறுவனங்கள் அனைத்தும் தமிழ்நாட்டை நோக்கி வருவதற்கும் வாசலைத் திறந்து வைத்தது கருணாநிதி உருவாக்கிய அந்த டைடல் பார்க்தான்.

அந்த வகையில் – நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியான தலைவர் கருணாநிதியின் நூற்றாண்டு தொடங்குவதை ஒட்டி அவருக்கு, அவருடைய புகழுக்கு மேலும் மேலும் புகழ் சேர்க்கும் வகையில், ஓர் அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.

தலைநகர் சென்னையில் உலகத்தரம் வாய்ந்த பன்னாட்டு அரங்கம் அமைக்கப்படும். உலகளவில் உள்ள கூட்ட அரங்கங்களில் மகத்தான “BEST IN CLASS” Convention Center-ஆக இது அமைய வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

உலகளாவிய தொழில் கண்காட்சிகள் - வர்த்தக மாநாடுகள் - தொழில்நுட்பக் கூட்டங்கள் - உலக நிறுவனங்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் - உலகத் திரைப்பட விழாக்கள் - போன்றவை நடக்கும் இடமாகக் ‘கலைஞர் Convention Centre’ அமைய வேண்டும் என எண்ணுகிறேன். இது, சிங்கப்பூர், ஜப்பான் பயணத்தின்போது எனக்கு ஏற்பட்ட எண்ணம்!

மிகப்பெரிய Convention Centre-கள் உலகின் பல நாடுகளில் இருப்பதுபோல தமிழ்நாட்டில் – சென்னையில் இருக்கிறது - அதுவும் கருணாநிதி பெயரால் இருக்கிறது என்பதுதான் மாபெரும் பெருமையாக இருக்கும். Convention Centre போன்ற பயன்பாட்டுச் சின்னங்கள் கருணாநிதி புகழை நூற்றாண்டுகள் கடந்தும் - உலகமெங்கும் எடுத்துச் செல்லும்.

ஏற்கெனவே, தற்போது சென்னை நந்தம்பாக்கத்தில் 10 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் வர்த்தக மையம் அமைந்திருந்தாலும், கூடுதலாக கட்டப்பட்டு வரும்

வர்த்தக மையம் சுமார் 12 ஆயிரம் சதுர மீட்டர் அளவில் அது இருந்தாலும், இது வளர்ந்து வரும் தேவைக்கும், எதிர்காலத் தேவைக்கும் போதுமானதாக இல்லை. எனவே, இதனைக் கருத்தில் கொண்டு அமையவுள்ள இந்த 'கலைஞர் Convention Centre' சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் 5 ஆயிரம் நபர்கள் அமரக்கூடிய - உலகத்தரத்திலான மாநாட்டு அரங்கம், கண்காட்சி அரங்கங்கள், நட்சத்திரத் தரத்திலான தங்கும் விடுதிகள், உணவகங்கள், ஊடக அரங்கங்கள், பூங்காக்கள், பன்னடுக்கு வாகன நிறுத்தம் - ஆகியவற்றை உள்ளடக்கி மிகப்பிரம்மாண்டமாக உலகத் தரத்தில் சென்னையில் அமைக்கப்படும் என்பதை பெருமையோடும் – மகிழ்ச்சியோடும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

'கலைஞர் convention centre' என்பது தமிழ்நாட்டு இளைய சக்தியை – அறிவு சக்தியை பூமிப்பந்தில் உள்ள அனைத்து இடங்களுக்கும் அழைத்துச் செல்வதாக அமையும். 'நான் முதல்வன்' என்ற திட்டத்தின் மூலமாகப் பயிற்சி பெற்று வரும் இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு மாணவர்களுடைய, இளைஞர்களுடைய அறிவுக்குடியிருப்பாக 'கலைஞர் convention centre' அமையுமானால் காலமெல்லாம் கருணாநிதி வாழ்வார்! அதுவே நம்மை ஆளாக்கிய தலைவருக்கு நாம் செய்யக்கூடிய சிறப்பான, உண்மையான புகழாக இருக்கும்.

கருணாநிதியின் முகம்தான் நமது இலச்சினை! கருணாநிதியின் கொள்கைகள்தான் நமது இலட்சியங்கள்! கருணாநிதியின் கனவுகளை நிறைவேற்றுவதுதான் நமது வாழ்நாள் கடமை என்பதைச் சொல்லி கருணாநிதியின் புகழ் இன்னும் பல நூறாண்டுகள் கடந்து, வாழ்க, வாழ்க, வாழ்க." இவ்வாறு முதல்வர் பேசினார்.

**பனைமரத் தொழிலாளர்கள் வாழ்வாதாரம் உயர ராமநாதபுரம் கருப்பட்டிக்கு புவிசார் குறியீடு கிடைக்குமா?**



**ராமநாதபுரம்:** ராமநாதபுரம் கருப்பட்டிக்கு புவிசார் குறியீடு வழங்குவதன் மூலம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி அதிகரிக்கும். தங்களின் வாழ்வாதாரம் உயரும் என்று பனைமரத் தொழிலாளர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். தமிழகத்தில் 2018-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 2.50 கோடி பனைமரங்கள் உள்ளன. இதில் ராமநாதபுரம் மாவட்டத்தில் 15 லட்சம் பனைமரங்கள் உள்ளன.

ராமநாதபுரம் மாவட்டத்தில் பயிர் சாகுபடி, மீன்பிடித் தொழிலுக்கு அடுத்தபடியாக பனைத் தொழில் இருந்து வருகிறது. மாவட்டத்தில் 1.75 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பனைமரத் தொழில் மற்றும் அது சார்ந்த உப தொழில் செய்து வருகின்றனர். குறிப்பாக சாயல்குடி, திருப்புல்லாணி, ராமநாதபுரம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அதிகளவில் பனைமரத் தொழில் நடைபெறுகிறது. இத்தொழில் ஜனவரி தொடங்கி ஜூலை மாதம் வரை நடைபெறுகிறது.

பனை மரத்திலிருந்து நுங்கு, பதநீர், கருப்பட்டி உள்ளிட்டவைக்கு சந்தையில் தேவை அதிக அளவில் உள்ளது. குறிப்பாக கருப்பட்டியை அன்றாட இனிப்பு பலகாரங்களில் மட்டுமின்றி, மிட்டாய்கள், சாக்லெட்,

சாஸ் உள்ளிட்ட மதிப்புக் கூட்டுப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. கருப்பட்டிக்கு தமிழகத்தில் மட்டுமின்றி வெளிமாநிலங்கள், வெளிநாடுகளிலும் வரவேற்பு உள்ளது. கடந்தாண்டு ராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.20 கோடிக்கு கருப்பட்டி விற்பனை நடத்துள்ளதாக வியாபாரிகள் கூறுகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்ட கருப்பட்டிக்கு புவிசார் குறியீடு வழங்கினால், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்பாக அமையும். நாங்கள் கருப்பட்டி மொத்த வியாபாரிகளிடம் முன்பணம் வாங்கி தொழில் செய்கிறோம்.

இதற்கு மாற்றாக அரசு வங்கிக் கடன் வழங்கவும், கருப்பட்டி காய்ச்சும் உபகரணங்களை மானிய விலையில் வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். கருப்பட்டியை அரசே கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்தால் பனைத்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மேம்படும்.

மீனவர்களுக்கு மீன்பிடித் தடைகால நிவாரண நிதி வழங்குவதுபோல், பனைத்தொழிலாளர்களுக்கும் தொழில் இல்லாத 6 மாதங்களுக்கு உதவித்தொகை வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## விஷவாயு மரணங்களை தடுக்க தூர்வாரும் நிபந்தனைகளை திருத்துமா மாநகராட்சி?

கழிவுகளை அகற்றும் பணியின்போது விஷ வாயு தாக்கி தொழிலாளிகள் அதிகம் உயிரிழப்பது தமிழகத்தில் தான். வழக்கமாக மலக்கசடு தொட்டிகளை திறக்கும்போதும், அவற்றில் இறங்கும்போதும் விஷ வாயு தாக்கி உயிரிழக்கின்றனர். இவை அடைப்பிடங்களாக உள்ளன. ஆனால் கடந்த ஆண்டு சென்னை மாதவரத்தில், குடிநீர் வாரிய ஒப்பந்த பணியாளர்கள் 2 பேர், திறந்த

வெளியில், நடுத்தெருவில் உள்ள கழிவுநீர் குழாய் மூடியை திறக்கும்போது விஷவாயு தாக்கி உயிரிழந்துள்ளனர்.



இது மிகவும் ஆபத்தானது. பொதுமக்களுக்கு அறிவுரைகளை வழங்கும் குடிநீர் வாரிய பணியாளர்களே உயிரிழந்திருப்பதால், அவர்களுக்கு முறையான பயிற்சி வழங்கப்படவில்லையோ என்ற சந்தேகம் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது. விஷவாயு தாக்கி சென்னையில் மட்டும் 1993-ம் ஆண்டு முதல் 50-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். புழல் பகுதியிலும் கடந்த வாரம் மேலும் 2 பேர் விஷ வாயு தாக்கி உயிரிழந்துள்ளனர். சென்னை மாநகராட்சி சார்பில் 2 ஆயிரத்து 70 கிமீ நீளமுள்ள 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மழைநீர் வடிகால்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

விரைவில் தென்மேற்கு பருவமழை தொடங்க இருப்பதால் மாநகராட்சி நிர்வாகம், மழைநீர் வடிகால்களில் தூர் வாரும் பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. பிரதான சென்னை பகுதிகளான ராயபுரம், தண்டையார்பேட்டை, திரு.வி.க.நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்களில் பெரும்பாலானவற்றில் 365 நாளும் விதிகளை மீறி கழிவுநீர் விடப்பட்டு, கழிவுநீர் நிறைந்து காணப்படுகின்றன.

இவற்றில் தூர் வாரும் பணிகளின்போது இது நாள் வரை எந்த ஒப்பந்ததாரரும் கழிவுநீரை வெளியேற்றிய பின் மழைநீர் வடிகாலை தூர் வாரியதே இல்லை. கழிவுநீர் தேக்கத்திலேயே இறங்கிதான் தூர் வாருகின்றனர். தமிழக அரசும் மனிதக் கழிவுகளை அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும் மறுவாழ்வு சட்டம் 2013-ன் கீழ் விதிகளை திருத்தியுள்ளது.

அதில், "பிரிவு 7-ன்படி மனிதக் கழிவுகளை அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும் மறுவாழ்வு சட்டம் 2013, பிரிவு 7-ன் படி, எந்தவொரு நபரும், ஒப்பந்ததாரரும் அல்லது எந்தவொரு நிறுவனமும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு நபரையும் அபாயகரமான முறையில் கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்வதற்கு ஈடுபடுத்தக்கூடாது.

அவ்வாறு ஈடுபடுத்தினால், அந்த நபரின் மீது மேற்படி சட்டப்பிரிவு 9-ன்படி முதன் முறையாக மீறுபவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது ரூ.2 லட்சம் அபராதம் அல்லது 2-ம் தண்டனையாக விதிக்கப்படும். 2-வது முறையாக மீறுபவர்களுக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது ரூ.5 லட்சம் அபராதம் அல்லது 2-ம் சேர்த்து விதிக்கப்படும்" என குறிப்பிட்டுள்ளது.

மேலும் விஷ வாயு மரணங்களை தடுக்க தமிழக அரசும் நகராட்சி சட்டங்கள் மற்றும் சென்னை குடிநீர் வாரிய சட்டங்களை திருத்தி, இயந்திரங்களைக் கொண்டே கழிவுநீர் அகற்ற வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. மாநகரப் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்களில் கழிவுநீர் தேங்கி இருப்பதால், அவற்றில் தூர் வாரும் பணிகளுக்கும் மேற்கூறிய விதிகள் பொருந்தும்.

ஆனால் இந்த புதிய விதிகள் வந்த பிறகும், கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் தூர் வாரும் பணியின்போது, பணியாளர்கள் கழிவுநீரில் இறங்கி, எந்த பாதுகாப்பு உபகரணங்களும் இன்றியே மலக்கசடு மற்றும் தூரை வாரினர். மாதவரத்தில் நிகழ்ந்தது போல, மழைநீர் வடிகால்களிலும் வரும் காலங்களில் விஷ வாயு வெளியேறி உயிரிழப்புகள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன.

அதனால் சென்னை, புறநகர் பகுதிகளில் மழைநீர் வடிகால்களில் கழிவுநீர் தேங்கியுள்ள பகுதிகளில் தூர்வாரும்போது கட்டாயம் இயந்திரங்களைக் கொண்டே தூர் வார வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் தூர் வாருவதற்கான ஒப்பந்த ஆணைகளை சென்னை மற்றும் புறநகரில் உள்ள உள்ளாட்சி நிர்வாகங்கள் வழங்க வேண்டும்.

இது குறித்து ஆதி தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா.அதியமான் கூறியதாவது: மலக்கசடுகளை அகற்ற இயந்திரங்களை பயன்படுத்த அரசு விரும்புகிறது. அதிகாரிகள் விரும்புவதில்லை. விஷ வாயு மரணங்களைத் தடுக்க சென்னை, புறநகர் பகுதிகளில் மலக்கசடு தொட்டிகள் அமைக்க தடை விதிக்க வேண்டும். மழைநீர் வடிகாலில் கழிவுநீர் விடுவதை முற்றிலுமாக தடுக்க வேண்டும். எல்லா இடங்களிலும் பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்துவது என அரசு கொள்கை முடிவு எடுக்க வேண்டும். இறப்பு ஏற்பட்டால் அதிகாரிகளின் சொந்த நிதியில் இருந்து இழப்பீடு வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

தேசிய தூய்மைப் பணியாளர் மறுவாழ்வு ஆணையத் தலைவர் எம்.வெங்கடேசன் கூறும்போது, “விஷ வாயு மரணங்களில் தேசிய அளவில் தமிழகம் தான் முதலிடத்தில் உள்ளது. இன்று வரை 225 பேர் உயிரிழந்துள்ளனர். தூய்மைப் பணியாளர்களுக்கு கடந்த ஆட்சியில் நல வாரியம் அமைக்கப்பட்டது. அதன் பிறகு புதிய அரசு ஆட்சிக்கு வந்து 2 ஆண்டுகள் ஆகியும் இதுவரை ஒரு கூட்டம் கூட கூட்டப்படவில்லை. இதுபோன்ற மரணங்களைத் தடுக்க மாநில அளவில் கண்காணிப்பு குழு அமைக்கவில்லை” என்றார்.

சென்னையில் கழிவுநீர் அகற்றலின் போது விஷவாயு தாக்கி உயிரிழப்பதை தடுக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து சென்னை குடிநீர் வாரிய அதிகாரிகள் கூறியதாவது: மாநகராட்சிபகுதிகளில் கழிவுநீர் அகற்றும் பணியில் ஈடுபடும் லாரி உரிமையாளர்களுக்கான விழிப்புணர்வு கூட்டத்தை நடத்தி இருக்கிறோம். அதில், "மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இவ்வாரியம் மூலம் உரிமம் பெற்ற லாரி உரிமையாளர்கள் மட்டுமே கழிவுநீர்த் தொட்டியிலிருந்து

கழிவுநீரை அகற்ற அனுமதிக்கப்படுவார்கள். இதுநாள் வரையிலும் உரிமம் பெறாத லாரி உரிமையாளர்கள் உடனடியாக உரிமம் பெற விண்ணப்பிக்க வேண்டும்.

வாரியத்தின் அங்கீகரிக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் கழிவுநீர் உந்து நிலையங்களில் மட்டுமே கழிவுநீரை வெளியேற்ற வேண்டும்" என்று அறிவுறுத்தி இருக்கிறோம். வாரியத்தின் மூலம் உரிமம் பெறாத லாரிகளை ஆய்வு செய்ய சிறப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அதன்படி, சட்டவிரோதமாக கழிவுநீர்த் தொட்டியிலிருந்து கழிவுநீரை அகற்றுபவர்களை முதல் விதிமீறலுக்கு ரூ.25 ஆயிரம், 2-வது முறை விதிமீறலுக்கு ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும். தொடர்ந்து விதிமீறினால் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்.

தேவையான அனைத்து பாதுகாப்பு உபகரணங்களும், சாதனங்களும் கழிவுநீர் லாரிகளில் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். பணியாளர்களை கழிவுநீர்த் தொட்டி சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடுத்தி, அப்பணியாளர் இறக்க நேரிட்டால், இழப்பீட்டுத் தொகை ரூ.15 லட்சத்தை வீட்டு உரிமையாளர் மற்றும் லாரி உரிமையாளர் ஆகிய இருவராலும் இறந்தவர்களின் குடும்பத்துக்கு வழங்கப்பட வேண்டும் என்பது குறித்தும் விளக்கி இருக்கிறோம்.

சட்ட விரோதமாக கழிவு நீரகற்றுவதை தடுக்க விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, விரிவாக்கப்பட்ட பகுதிகளில் வீடுவீடாக துண்டு பிரசுரம் மூலமும், ஒலிபெருக்கி பொருத்திய ஆட்டோக்கள் மூலமும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும் என்று மண்டல பொறியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. புறநகர் பகுதிகளில் ஏற்படும் விஷ வாயு மரணங்களைத் தடுக்க, வரும் காலங்களில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும பகுதியில் இடம்பெற்றுள்ள புறநகர் பகுதிகளிலும் கழிவுநீரகற்று சேவைகளை வாரியம் மூலம் வழங்க திட்டமிட்டிருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

சென்னையில் விஷ வாயு மரணங்களைத் தடுக்க, தூர் வாரும் பணிகளின்போது, கழிவுநீர் தேங்கியுள்ள இடங்களில் இயந்திரங்களை பயன்படுத்தி, உரிய பாதுகாப்பு உபகரணங்களுடன் தூர் வாருமாறு, ஒப்பந்ததாரர்களுக்கு நிபந்தனைகள் விதிக்கப்படுமா என சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணனிடம் கேட்டபோது, “வரும் ஜூன் 2-ம் தேதி மழைநீர் வடிகால்கள் பணிகள் தொடர்பாக உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்த இருக்கிறேன்.

அப்போது இதுகுறித்து கலந்தாலோசித்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.கடந்த ஆண்டு பருவமழைக்கு முன்பாக சென்னை, தண்டையார்பேட்டை மண்டலம், வியாசர்பாடி பக்தவத்சலம் காலனி பகுதியில் மழைநீர் வடிகாலில் தேங்கியுள்ள கழிவுநீரில் இறங்கி, எந்தவித பாதுகாப்பு உபகரணங்களும் இன்றி தூர்வாரும் தொழிலாளர்கள். இரா.அதியமான்

## இளைஞர்கள் சுயதொழில் தொடங்க முன்வர வேண்டும்: அமைச்சர் தா.மோ.அன்பரசன் அழைப்பு

**சென்னை:** சென்னை கிண்டி சிட்கோ தலைமையகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் அமைச்சர் பேசியதாவது: இந்த ஆண்டு சட்டப்பேரவையில் வெளியிட்ட அறிவிப்பின்படி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் (UYEGP), வியாபாரம் சார்ந்ததொழில்களுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டு, அதற்கான திட்ட மதிப்பின் உச்சவரம்பு ரூ.5 லட்சத்தில் இருந்துரூ.15 லட்சமாகவும், அரசு மானியம்ரூ.1.25 லட்சத்தில் இருந்து ரூ.3.75லட்சமாகவும் உயர்த்தி அரசாணைவெளியிடப்பட்டுள்ளது.

இளைஞர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி புதிய தொழில்முனைவோராக உருவாக வேண்டும். மேலும், உற்பத்தி மற்றும் சேவை துறைகளுக்கான தொழில்களுக்கு பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் மானியத்துடன் கடனுதவி வழங்கப்படும்.

புதிதாக அறிவிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர விசைத் தறிகளின் உற்பத்தியை அதிகரிக்க, உயர் தொழில்நுட்பம் சார்ந்த நாடா இல்லாத நெய்தலுக்கான கருவிகளை பொருத்த 25 சதவீதம் முதலீட்டு மானியம் வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதை நெசவாளர்கள் பயன்படுத்திக் கொண்டு தங்களின் விசைத்தறிக் கூடங்களை நவீனமாக்க வேண்டும்.

கிராமப்புற மக்களுக்கு அதிக வேலைவாய்ப்பு வழங்கும் தென்னை நார் பொருட்கள் தயாரிப்புக்கு அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இந்த தொழிலில் ஈடுபட்டுள்ள குறு, சிறு நடுத்தரதொழில் நிறுவனங்களுக்கு மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தென்னைநார் உலர்த்தும் கருவிகள், இயந்திரங்கள், உபகரணங்களுக்கு முதலீட்டு மானிய திட்டத்தின்கீழ் 25 சதவீதம் மானியம் வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தின் கலாச்சாரம் மரபை பின்பற்றி பணிபுரிவேன் - தலைமை நீதிபதி கங்காபுர்வாலா உறுதி



**சென்னை**: சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள கங்காபுர்வாலா, கடந்த 28-ம் தேதி ஆளுநர் மாளிகையில் பதவியேற்றுக் கொண்டார்.

இந்நிலையில், உயர் நீதிமன்றத்துக்கு நேற்று வந்த அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்குள்ள கூட்ட அரங்கில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில், தலைமை நீதிபதி கங்காபுர்வாலாவை, தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம் வரவேற்றார்.

பின்னர், `வணக்கம்' என்று தமிழில் கூறி உரையைத் தொடங்கிய தலைமை நீதிபதி, ‘‘பல சான்றோர்களையும், கலை, கலாச்சாரச் செறிவையும் கொண்ட தமிழகத்தில் பணியாற்றுவது கவுரவம்மிக்கது. சென்னை உயர் நீதிமன்றம், பல உச்ச நீதிமன்ற நீதிபதிகளையும், சட்ட வல்லுநர்களையும் தந்துள்ளது.

இன்றைய இளைய வழக்கறிஞர்களும், அந்தப் பெருமையை தொடர்ந்து கொண்டுசெல்வர். தமிழகத்தின் மரபு, கலாச்சாரங்களைப் பின்பற்றி, உங்களில் ஒருவனாக நான் பணியாற்றுவேன்’’ என்றார். இந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் தலைவர் அமல்ராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள ஆண்கள் ஆர்வம்: வாசக்டமியில் மாநில அளவில் கரூர் 2-ம் இடம்



**கரூர்:** ஆண்கள் குடும்ப நல அறுவை சிகிச்சையில் தங்கத் தந்தை திட்டம் அமல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, கரூர் மாவட்டம் மாநில அளவில் 2-ம் இடத்தைப் பெற்றுள்ளது. ஆண்களுக்கான குடும்ப நல அறுவை சிகிச்சை (வாசக்டமி) எளிதானது என்றாலும், தமிழகத்தில் ஆண்கள் பெருமளவில் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொள்ள முன்வருவதில்லை.

ஆனாலும், ஆண்களுக்கான அறுவை சிகிச்சைக்கு ஆண்டுதோறும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. இதன்படி, 2022-23-ம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 7,000 பேருக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், 1,304 பேருக்கு மட்டுமே அறுவை சிகிச்சை செய்து, 18.6 சதவீதம் மட்டுமே இலக்கு எட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆண்களுக்கான குடும்ப நல அறுவை சிகிச்சையை ஊக்குவிக்கும் வகையில், கரூர் மாவட்டத்தில் 2021-ம் ஆண்டு நவம்பரில் தங்கத் தந்தை திட்டத்தை ஆட்சியர் த.பிரபுசங்கர் அறிமுகம் செய்தார். இத்திட்டத்தின் கீழ் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் ஆண்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளும் அறிவிக்கப்பட்டன.

அதன்படி, அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு ரூ.1,100-க்குப் பதிலாக ரூ.5,000 அல்லது அரசின் நலத்திட்ட உதவிகள் ஏதேனும் ஒன்று முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுவதுடன், தங்கத் தந்தை விருதும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, கரூர் மாவட்டத்தில் ஒற்றை இலக்கங்களில் இருந்து வந்த குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் ஆண்களின் எண்ணிக்கை, 2021-22-ம் ஆண்டில் 5 மாதங்களில் மட்டும் 84 ஆக அதிகரித்தது. தொடர்ந்து, 2022-23-ம் ஆண்டில் 110 பேருக்கு அறுவை சிகிச்சை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், 91 பேருக்கு(82.7 சதவீதம்) அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இதன்

மூலம் சதவீத அடிப்படையில் மாநில அளவில் கரூர் மாவட்டம் 2-ம் இடத்தைப் பெற்றுள்ளது.

**'தங்கத் தந்தை' விருது திட்டத்தில் வழங்கப்படும்:** நலத்திட்ட உதவிகள் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் ஆண்களுக்கு ரூ.5 ஆயிரம் ரொக்கம் அல்லது இலவச வீட்டுமனை, வீட்டில் உள்ள முதியவர் ஒருவருக்கு முதியோர் உதவித் தொகை, விலையில்லா கறவை மாடு அல்லது வெள்ளாடு, இலவச கால்நடை கொட்டகை, சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் தொடங்க ரூ.10 லட்சம் வரை குறைந்த வட்டியில் பிணையதாரர் இல்லாமல் வங்கிக் கடன் உதவி, வேளாண்மைத் துறையின் மூலமாக சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் நுண்ணீர் பாசனம் அமைத்து தருதல், விவசாயிகளுக்கு சதுர மீட்டர் ஒன்றுக்கு ரூ.445 வீதம் 50 சதவீத மானியத்துடன் 1,000 சதுர மீட்டர் அளவில் பசுமைக் குடில் திட்டத்தின் மூலம் பாலிதீன் குடில் அமைத்து தருதல், மாற்றுத் திறனாளிகளுக்கு செயற்கை கை, கால் உபகரணங்கள் இலவசமாக வழங்குதல் போன்ற அரசுத் திட்டங்களில் முன்னுரிமை அடிப்படையில் ஏதாவது ஒரு நலத்திட்ட உதவி வழங்கப்படுகிறது.

## நம்பியாற்றுக்கு மிகப் பெரிய நம்பிக்கை துரோகம் - 'அவசர சிகிச்சை' தேவை என மக்கள் கருத்து



திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆறு உள்ளிட்ட அத்தனை ஆறுகளிலும் கழிவு நீர் கலக்கும் பிரச்சினை தீர்வில்லாமல் தொடரும் நிலையில்,

நம்பியாற்றின் நிலையோ கண்ணீரை வரவழைப்பதாக உள்ளது. ஒருகாலத்தில் இந்த ஆற்றங்கரையில் நிரம்பியிருந்த மணலை அள்ளி இயற்கைக்கு துரோகம் விளைவித்திருந்த நிலையில், தற்போது சாக்கடை ஓடும் ஆறாக மாற்றப்பட்டிருக்கிறது.

மேற்கு தொடர்ச்சி மலையின் மகேந்திரகிரி, திருக்குறுங்குடி பகுதிகளில் நம்பியாறு உற்பத்தியாகிறது. வழியில் பரட்டையாறு, தாமரையாறு ஆகிய துணை ஆறுகள் இதனுடன் இணைகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தின் நம்பி மலையில் அருவியாக கொட்டுகிறது. தற்போதைய கோடையிலும் லேசாக இங்கு தண்ணீர் கசிகிறது. அருவியின் அருகே இயற்கையாக அமைந்த பள்ளம் இருக்கிறது.

அதனை நிரப்பிய பின்னர் வனப்பகுதி வழியாக ஓடி குடியிருப்பு பகுதிகளுக்கு வருகிறது நம்பியாறு. வனப்பகுதியில் மட்டுமே நம்பியாற்றில் நல்ல தண்ணீரை பார்க்க முடியும். மக்கள் வாழும் குடியிருப்பு பகுதிகளில் ஆறு சாக்கடையாக உருமாற்றப்பட்டுவிட்டது. வனப்பகுதியிலிருந்து திருக்குறுங்குடி, ஏர்வாடி, சிறுமளஞ்சி, ராஜாக்கள்மங்கலம், சித்தூர், ஆற்றங்கரை பள்ளிவாசல் வழியாக ஓடி உவரி அருகே கடலில் கலக்கிறது.

**ஆக்கிரமிப்பு அதிகரிப்பு:** தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணைத் தலைவர் பி. பெரும்படையார் கூறும்போது, “நம்பியாறு ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு சுருங்கிவிட்டது. இந்த ஆறு பாய்ந்தோடும் பகுதிகளில் உள்ள அனைத்து உள்ளாட்சிகளின் சாக்கடை கழிவுநீரும் எவ்வித தடையுமின்றி ஆற்றில் கலக்கிறது. கழிவுநீரை சுத்திகரிக்க நடவடிக்கை எடுப்பதாக அவ்வப்போது தெரிவித்து வருகிறார்கள். ஆனால் முறையாக எவ்வித திட்டங்களையும் செயல்படுத்தவில்லை. 25 ஆண்டுகளுக்கு முன்புவரை உயிரோட்டமாக இருந்த ஆற்றில் இருந்து மணல் அளவுக்கு அதிகமாக அள்ளப்பட்டது.

தற்போது ஆற்றங்கரையிலிருந்து நிலத்தடி நீரை வரைமுறையின்றி உறுஞ்சுகிறார்கள். நம்பியாற்றை காக்க வேண்டுமானால் அரசும், மாவட்ட நிர்வாகமும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உரிய சர்வே செய்து ஆற்றங்கரை ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். சாக்கடை கலப்பதை தடுக்க உரிய திட்டங்களை செயல்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே விவசாயத்துக்கும், குடிநீருக்கும் நம்பியாறு பயன்படும். இல்லாவிட்டால் திருநெல்வேலி மாவட்டத்தின் கூவம் ஆறாகவே இது மாறிவிடும்” என்று தெரிவித்தார்.

## ஜனநாயகம், முகலாய ஆட்சி, குஜராத் கலவரம் உள்ளிட்ட பகுதிகள் என்சிஇஆர்டி பாடத்திட்டத்தில் இருந்து நீக்கம்



**புதுடெல்லி**: தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு (என்சிஇஆர்டி), 6-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரையிலான பாடத் திட்டங்களில் பல்வேறு புதிய மாற்றங்களை மேற்கொண்டுள்ளது.

மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு கல்விக் கொள்கை, பாடத் திட்டங்கள் சார்ந்து ஆலோசனை வழங்குவதற்காகவும் கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள் வகுப்பதற்காகவும் மத்திய அரசால் 1961-ம் ஆண்டு தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு உருவாக்கப்பட்டது.

இக்குழு தற்போது 6 முதல் 12-ம் வகுப்பு வரையிலான பாடத் திட்டங்களில் பல்வேறு பகுதிகளை நீக்கியுள்ளது. ஜனநாயகம், முகலாய ஆட்சி, குஜராத் கலவரம், இந்திய ஏற்றத்தாழ்வு, வறுமை உள்ளிட்ட பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன.

6-ம் வகுப்பு பாடங்களிலிருந்து ஜனநாயகம், காலநிலை மாற்றம், கானுயிர் பாதுகாப்பு, உணவு உள்ளிட்டவை குறித்த பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன. 7-ம் வகுப்பு பாடங்களிலிருந்து இந்திய ஏற்றத்தாழ்வு குறித்த பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் ஏன்ஏற்றத்தாழ்வு தீவிரமாக காணப்படுகிறது என்பது இந்தப் பகுதியில் விளக்கப்பட்டிருந்தது.

11-ம் வகுப்பு பாடங்களிலிருந்து ஏழ்மை, அமைதி உள்ளிட்ட பகுதிகளும், 12-ம் வகுப்பு பாடங்களிலிருந்து குஜராத் கலவரம், இந்தியா–பாகிஸ்தான் பிரிவினை, பனிப்போர், இனப்பெருக்கச் செயல்பாடு உள்ளிட்ட பகுதிகளும் நீக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசின் அரசியல்நோக்கத்துக்கு உட்பட்டு பாடத்திட்டங்கள் நீக்கப்படுவதாக கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் என துறைசார் வல்லுநர்கள் விமர்ச்சித்து வருகின்றனர்.

கரோனா ஊரடங்கு காரணமாக பள்ளி மாணவர்களின் கற்றல் செயல்பாடு பாதிக்கப்பட்டதால், பள்ளிப் பாடத்திட்டங்களை எளிமையாக்கும் நோக்கில் மாற்றங்கள் மேற்கொண்டு வருவதாக தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு தெரிவித்துள்ளது

EVA STALIN IAS ACADEMY